செ.வெ.எண்-17 நாள்-05.02.2020

# அரியலூர் மாவட்டம்
# தோட்டக்கலைத் துறையின் மூலம் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டம், நாகமங்கலம், பொய்யூர், மேலக்கருப்பூர், அருங்கால், வாரணவாசி ஆகிய பகுதிகளில் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலை துறை மூலம் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம் போன்ற திட்டங்கள் மானிய விலையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலை பயிர்களில் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர் பாசன அமைத்துத்தரப்படுகிறது.

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் காய்கறி பரப்பு அதிகரித்தல் இனத்தில்எக்டருக்கு ரூ.20,000 மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டம் நாகமங்கலம் கிராமம் திரு.முருகையன் அவர்களுக்கு பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சொட்டுநீர் பாசனம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற சம்மங்கி ஆகியவற்றிற்கு ரூ.1.30 இலட்சம் மானியம் வழங்கி பயிர் செய்யப்பட்டுள்ளதையும், பொய்யூர் கிராமம், திரு.சிவகுமார் அவர்களுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்ட சிப்பம் கட்டும் அறை, மிளகாய், கஜா தொகுப்பு திட்டதின் கீழ் ரூ.5 ஆயிரம் மானியம் பெறப்பட்ட வாழை ஆகியவற்றையும், மேலக்கருப்பூர் கிராமத்தில் திரு.கணேசன் அவர்களுக்கு பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் கொய்யா தோட்டத்திற்கு ரூ.3.5 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்ட சொட்டுநீர் பாசன அமைப்பிணையும் பார்வையிட்டு, இத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து. அருங்கால் கிராமத்தில், திரு.சம்சுதீன் மற்றும் திருமதி.விஜயா ஆகியோரின் மரவள்ளி மற்றும் கத்திரி தோட்டங்களில் 100 சதவீத மானியத்தில் ரூ.1.50 இலட்சம் மற்றும் ரூ.60 ஆயிரம் முறையே சொட்டுநீர் பாசனம் அமைப்பினை ஆய்வு செய்து, மேலும், திரு.பூமாலை அவர்கள் வயலில் கருவேப்பிலையில் ரூ.1 இலட்சம் மதிப்பில் சொட்டுநீர் பசானம் அமைக்கப்பட்ட வயலினை பார்வையிட்டு, அரியலூர் போன்ற வறட்சி மாவட்டங்களில் விவசாயிகள் கருவேப்பிலை போன்ற பயிரினை சாகுபடி செய்ய முன்வர வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், திருமானூர் வட்டாரம், வாரணவாசி கிராமம் திரு.இராஜேந்திரன் அவர்கள் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் ரூ.6.465 இலட்சத்தில் பயன்பெற்ற பசுமைகுடில், சிப்பம் கட்டும் அறை, முருங்கை பயிர் சாகுபடியினை ஆய்வு செய்யப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில் 1500 ஏக்கர் மேற்பட்ட அளவில் விவசாயிகள் முருங்கை பயிரை பிரதான பயிராக செய்து வருவதால் இம்மாவட்டத்தில் முருங்கை இலையினை தூளாக்கி சந்தைப்படுத்தும் விதமாக பதப்படுத்தும் அலகு கொண்டுவரப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, உதவி இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) பா.சரண்யா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**